**<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>**

**<u>C.C. No. 283/2023</u>**

**<u>LW:8, PW:6</u>**

**10.06.2026**

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 10 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சரவணகுமார் | த / பெ. | திரு. அர்ஜீனன் |
| கிராமம் | : | குளிக்கரை | தாலுக்கா | திருவாரூர் |
| தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் | வயது | 50 |

**<u>எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.</u>**

**<u>முதல்விசாரணை</u>**

நான் தற்போது திருவாரூர் நகர காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருவாரூர் தாலுக்கா காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது 18.03.2023 ந் தேதி பணியிலிருந்த போது மதியம் சுமார் 13.00 மணியளவில் அந்தோணி, வயது 43, த/பெ. பொன்னையன் சிவராமன் நகர், எடையூர் என்பவர் நிலையம் ஆஜராகி தனது மகன் ஆகாஷ் 13.03.2023 ந் தேதி இருசக்கர வாகனத்தில் செல்லும்போது விபத்து ஏற்பட்டு திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த போது அவருக்கு உதவியாக நானும் எனது மனைவியும், எனது மாமியாரும் இருந்து வந்த நிலையில் சம்பவ நாளான 18.03.2023 நள்ளிரவு திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை நுழைவு வாயில் அருகே தூங்கி கொண்டிருந்த நிலையில் இரவு சுமார் 01.30 மணியளவில் எழுந்து பார்த்த போது தனது பயன்பாட்டிற்கு வைத்திருந்த Android Real me செல்போனை காணவில்லை என்றும், அக்க பக்கத்தில் உள்ளவர்களிடம் விசாரித்து தனது செல்போனை பற்றிய விவரம் தெரியவில்லை என்றும், தனது செல்போனை மர்ம நபர்கள் யாரோ திருடி சென்றுவிட்டார்கள் என்று காணாமல் போன தனது செல்போனை கண்டுபிடித்து தரும்மாறு நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.112/2023 சட்டப்பிரிவு 379 IPC ன் படி வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து காவல் நிலையத்திற்கு சாதாரணமாக நடந்து வந்தால் 15 நிமிடங்கள் ஆகும். சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரம் அதிகாலை (நள்ளிரவு) 01.30 மணியளவு என்றால் சரிதான். சுமார் 11.30 மணி நேரம் காலதாமதமாக காவல் நிலையத்திற்கு தகவல்பெறப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 7 வது காலத்தில் எதிரி தெரியவில்லை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் பற்றி விளக்கப்பட்டுள்ள விவரத்தில் எதிரியை சம்பவ இடத்தில், சம்பவ நேரத்தில் பார்த்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தவறான தகவலின் அடிப்படையில் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.10 17:36:10 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்

C.C. No. 283/2023

LW:9, PW:7

10.06.2026

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 10 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4 ன் படி திருமதி. Dr. R. லதா, M.A.,M.L.,Ph.D., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. வைரமணி | த / பெ. | திரு. மாயாண்டி |
| கிராமம் | : | சிவகங்கை | தாலுக்கா | சிவகங்கை |
| தொழில் | : | சார்பு ஆய்வாளர் | வயது | 35 |

**எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை**

நான் தற்போது சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் திருவாரூர் மாவட்டம் தாலுக்கா காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்த போது 18.03.2023 ந் தேதி தலைமை காவலர் திரு. சரவணகுமார் என்பவர் திருத்துறைப்பூண்டி எடையூர் கிராமத்தை சேர்ந்த பொன்யைன் மகன் அந்தோணி என்பவர் தனது செல்போனை காணவில்லை என்று கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.112/2023 சட்டப்பிரிவு 397 IPC வழக்கு பதிவு செய்து எனது பார்வைக்கு வைத்திருந்ததை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடமான திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று சாட்சிகள் செந்தில் மற்றும் பிரேம் ஆனந்த் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைப்படம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். **மாதிரி வரைப்படம் அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு இவ்வழக்கின் புகார்தாரர் அந்தோணி மற்றும் அவரது மனைவி இந்திரா, அவருடைய மாமியார் சீத்தாலெட்சுமி மற்றும் பார்வை சாட்சிகளார் செந்தில் மற்றும் பிரேம் ஆனந்த் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். சம்பவம் உண்மை தெரிய வந்ததால் சம்பவ இடத்தை சுற்றி அரசு மருத்துவமனை வளாகத்தில் கண்காணிப்பில் இருந்த போது வாகனம் நிறுத்தும் இடத்தில் சந்தேகத்தின் பேரில் நின்றுக்கொண்டிருந்த ஒரு நபரை பிடித்து விசாரணை செய்த போது தன் பெயர் பிரவீன் வயது 23, த/பெ. செல்வம், கீழத்தெரு, நரசிங்கப்பேட்டை என்று கூறியவரிடம் சம்பவ

தொடர்பாக விசாரணை நடத்திய போது தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை 18.03.2023 ந் தேதி 15.00 மணியளவில் காரணம் கூறி கைது செய்து அங்கிருந்த சாட்சிகளான தினசீலன் மற்றும் ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அன்று 15.15 மணியளவில் பதிவு செய்தேன். பின்னர் அவர் ஆஜர் செய்த வழக்கு சொத்தான Realme Android போனை அதே சாட்சிகள் முன்னிலையில் அன்றே 16.20 மணியளவில் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தேன்.

பின்பு எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் 16.45 மணியளவில் நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். இவ்வழக்கின் சாட்சிகளான தினசீலன் மற்றும் ஆறுமுகம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். வழக்கு சொத்தினை படிவம் 91 ல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் விசாரணை முடித்து எதிரியின் மீது கடந்த 21.03.2023 ந் தேதி இ.த.ச.பிரிவு 379 ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

சம்பவம் நடந்து 11.30 மணி நேரம் காலதாமதமாக காவல் நிலையத்திற்கு தகவல் பெறப்பட்டது சம்மந்தமாக எனது இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. 1 முதல் 3 பட்டியல் சாட்சிகளும் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். 4 முதல் 6 பட்டியல் சாட்சிகள் மருத்துவமனை ஊழியர்கள் என்றால் சரிதான். அரசு மருத்துவமனைக்கு எதிரே கேண்டினும், மளிகை கடையும் உள்ளது என்றால் சரிதான். அந்த கடைகளில் பணிபுரிபவர்களையோ, சிகிச்சைக்கு வந்த நபர்களையோ இவ்வழக்கில் நான் விசாரித்தேனா என்றால் இல்லை. எனது வரைப்படத்தில் சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டுள்ள இடம் என்பது மருத்துவமனைக்கு வெளியில் உள்ள வராண்டா பகுதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

சாட்சிய வாக்குமூலங்களில் குறிப்பாக சம்பவமானது மருத்துவமனையில் உள்ளே அமைந்துள்ள 302 அறையின் முன் பகுதியில் சம்பவம் நடந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கைப்பற்றியதாக சொல்லப்படும் செல்போன் புகார்தாரருக்கு உரிமையானது என்பதை காட்டக்கூடிய இரசீதுகள் ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தட்டச்சு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் எங்கு தட்டச்சு செய்யப்பட்டது, எங்கு பதிவிறக்கம் செய்யப்பட்டது என்ற விவரத்தினை எனது இறுதி அறிக்கையில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. கைப்பற்றுதல் மகசரில் எதிரியிடமிருந்து தான் செல்போன் கைப்பற்றப்பட்டது என்பதற்கு எதிரியிடம் கையொப்பம் வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. எதிரி தானாக முன்வந்து எவ்வித வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், எதிரியிடமிருந்து தடய பொருள் எதுவும்

கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டவை என்றாலும், வழக்கு சாட்சிகளும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. காவல் நிலைய புள்ளிவிவரங்களுக்காக எதிரிக்கு எதிரான இவ்வழக்கு பொய்யாக ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிக்கும் யாதொரு சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.06.10 17:36:19 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்